International Refereed Journal of Tamil Studies Research (IRJTSR) E-ISSN: 2582-5313

**தமிழ் ஆய்வு ஆராய்ச்சியின் சர்வதேச நடுவர் இதழ் (ஐ.ஆர்.ஜே.டி.எஸ்.ஆர்)**

Volume: 03 Issue: 03 July to September 2021 www.irjtsjournal.org

# வெள்ளையானை நாவலில் கருப்பர் இன மக்களின் வாழ்க்கை நிலை

முனைவர் பொ.கோகிலா

*மதுரை - 19*

**முன்னுரை**

இலக்கியம் சமுதாயப் படைப்புக்களில் ஒன்றாகத் தோன்றுவது. மக்களின் வாழ்வியலையும் அனுபவங்களையும் அடிப்படையாகக் கொண்டு எழுவது. மக்களின் வாழ்க்கை நிலையை எல்லோருக்கும் எளிதில் புரியும் படி அமைந்த இலக்கியம் தான் புதினம். இதனைப் "புனைகதை உலகில் பூத்த மலர் தான் நாவல்" என்கிறார் தா.வே.வீராசாமி. 1878 - ஆம் ஆண்டு காலத்தில் தமிழகத்தின் தலைநகரான மதராஸ்மாகானத்தில் வாழ்ந்த மக்களின் வாழ்க்கைப் போராட்ட நிலையையும் அன்றைய மதராஸ் மாகானத்தினை ஆண்ட ஆங்கிலேயர்களின் ஆதிக்க முறையினையும் "வெள்ளையானை" நாவலில் படம் பிடித்துக் காட்டியிருக்கிறார் எழுத்தாளர் ஜெயமோகன். இந்நகரில் வாழ்ந்த கருப்பர் இனமக்களின் வாழ்வியல் நிலைகளைப் பற்றி ஆராய்வதாக இக்கட்டுரை அமையப்பெற்றுள்ளது.

**பிளாக் டவுன் (கருப்பர் நகரம்) தோற்றம்**

சென்னையின் முக்கிய அடையாளமாகத் திகழ்பவற்றில் முதன்மையானது 'புனித ஜார்ஜ் கோட்டை' இக்கோட்டை சென்னை மாநகரம் உருவாகக் காரணமானதாகும். ஆங்கிலேயர்கள் இந்தியாவை அடிமைப்படுத்த இந்தக் கோட்டை தான் அடித்தளம் அமைத்துக் கொடுத்தது.செயிண்ட் ஜார்ஜ் கோட்டை அன்றைய சென்னையை "வெள்ளையர் நகரம்" என்றும் "கருப்பர் நகரம்" என்றும் இரண்டு பகுதியாகப் பிரித்தது. கோட்டைக்குள்ளும் கோட்டைக்கு வெளியிலும் வெள்ளையர்கள் மட்டும் வாழ்ந்த பகுதி "வெள்ளையர் நகரம்" (whites town) என அழைக்கப்பட்டது. வெளிப்புறப் பகுதியில் ஆந்திராவில் இருந்து வந்த ஏராளமான கலைஞர்களும், நெசவாளர்களும், வெள்ளையர்களுக்கு வீட்டு வேலை, தோட்ட வேலை, பட்லர், குதிரை பராமரிப்பு, போன்றவர்கள் வாழ்ந்த பகுதி "கருப்பர் நகரம்"(Black town) இது பெரும்பறச்சேரி எனவும் அழைக்கப்பட்டது. இக்கருப்பர் நகரம் தான் பின்னர் 'ஜார்ஜ் டவுன்' ஆனது. இன்றைய சென்னை நகரின் ஜார்ஜ் டவுன், உயர்நீதிமன்றம், பிராட்வே, போன்ற பகுதிகளே அன்றைய பிளாக் டவுன் ஆகும்.

**கருப்பர் மக்கள் தோற்றம்**

அன்னிய நாடுகளிலிருந்தும், பிற மாநிலம் மாவட்டங்களிலிருந்தும் பிழைப்புத் தேடியும், உணவிற்காகவும், தன்னைக் காத்துக் கொள்ளவும் அன்றைய மதராஸில் குடியேறிய விளிம்புநிலை மாந்தர்களை கருப்பர் என்றழைத்தனர். செயிண்ட் ஜார்ஜ் கோட்டையில் தங்கியவர் தவிர வெள்ளையரல்லாத பிற மனிதர்களை கருப்பர் என்றழைத்தனர். இவர்கள் தங்குவதற்கென உருவான நகரமே 'கருப்பர் நகரம்'. இவ்வாறாகத்தான்சென்னை' எனும் மாபெரும் நகரம் உருவாகியது.

**கருப்பர் மக்களின் வாழ்க்கைச் சூழல்**

உழைக்கும் மக்கள் வாழ்கின்ற சூழ்நிலை, அவர்கள் கைக்கொண்டுள்ள பழக்கவழக்கங்கள் போன்றவையே அவர்களுக்கு எதிராக நிற்பதைப் புதினங்கள் கோடிட்டுக் காட்டுகின்றன. புதின ஆசிரியர்களின் பார்வையில் அடிமட்ட மக்களின் எல்லாக் கோணங்களும் பளிச்சிடுகின்றன. “மலை மக்களுக்குக் கடன் கொடுப்பவன் சமவெளியைச் சேர்ந்தவன். சுமவெளியைச் சார்ந்தே அவர்களின் வாழ்வின் தேவைகள் பூர்த்தி செய்யப்படுகின்றன.”[1] என்று நிலவியல் கூறுபாடுகள் மக்களின் வாழ்க்கைச் சிக்கல்களுக்கு காரணமாக இருப்பதை குறிப்பிடுகிறார் கு.சின்னப்ப பாரதி தமது சங்கம் புதினத்தின் மூலம், இந்நிலையில் வெளிப்பிழைப்புத் தேடி வரும் மக்களை ஜெயமோகன் குறிப்பிடுகிறார். “ஆதிக்க இனத்தின் பண்பு ஒரே மாதிரியாக இருக்கும் நிலையில் தொழிலாளர்கள் இடம் விட்டுப் பெயர்ந்தாலும் இவர்கள் வாழ்க்கையில் உயர்வைக் காணமுடியவில்லை, உரிமை உள்ள மண்ணிலே ஒடுக்கப்பட்டிருக்கும் அவர்கள் குடிப்பெயர்ந்து வாழும் மண்ணிலும் நரக வாழ்க்கையைச் சந்தித்துக் கொண்டிருக்கிறார்கள்”[2] என்று தொ.மு.சி. ரகுநாதன், பஞ்சும் பசியும், வீடற்றவன் நாவலில் குறிப்பிட்டிருக்கிறார். இவர் குறிப்பிட்டுள்ளதைப் போலவே வெள்ளையானை நாவலில் வரும் அடித்தட்டு மக்கள் ஐஸ்பேக்டரியில் ஒரு வேளை உணவிற்காக கொத்தடிமைகளாக்கப்பட்டு, தனது அடிப்படைத் தேவைகளையும், சுதந்திரங்களையும் இழந்து அன்னியர்களாக்கப்பட்டு ஒடுக்கப்பட்டிருக்கும் நிலையில் அம்மக்களை ஜெயமோகன் பதிவுசெய்துள்ளார்.

ஐஸ்பேக்டரியில் வேலை செய்து உடல் நோயுற்ற சவரிராயன் அவன் மனைவி இருவரும் தனக்கான மருத்துவத்திற்குப் பணம் வேண்டும் பொழுது,“வெளியே நின்றிருந்த சவரியையும் , மனைவியையும் ஓடிவிடும் படி குதிரைக்காரன் சொன்னான், அவர்கள் தயங்கினார்கள். சவரி இல்லை, பதில் என்ன என்று கேட்டு வரும்படி பாதிரியார் சொன்னார்.” என்றான். தண்டுக்காரன் டேய் முட்டாள் முதுகுத் தோல் உரிந்து விடும், அழுகிச் சாவாய் ஓடு. ஓடினால் தப்பினாய் என்று விரட்டினான். சவரி காலையில் பார்மர் தன் கூண்டு வண்டியில் வந்து இறங்கியதும் இருவரும் எழுந்து கைகூப்பி அழுதபடி சென்று அவர் காலில் விழ முயல அவர் அருவருப்புடன் அவர்களைத் தன் பிரம்பால் அடிக்க ஓங்கிய படி திரும்ப கூண்டு வண்டிக்குள் ஏறிவிட்டார். சவரி இவர் சப்பாத்துக்களைப் பிடித்துக் கொண்டு கதறியிருக்கிறான். பார்மர் சப்பாத்தால் அவனை உதைத்து வெளியே தள்ளிவிட்டு காலை இழுத்துக் கொண்டார்.” என்று மக்கள் ஒடுக்கப்படும் நிலையைக் குறிப்பிடுகிறார்.

**கருப்பர் மக்களின் இருப்பிடம்**

1878 அன்றைய மதராஸ் மாகானத்தில் வாழ்ந்த வெள்ளையரல்லாத, பிற மக்களின் இருப்பிடத்தினை கருப்பர் வாழிடம் என்று பிரிட்டிஷ் அரசாங்கம் நிர்ணயித்தது.அயோத்திக் குப்பம் ஆயிரம் விளக்கு,ராயபுரம்,செங்கல்பட்டு,புதுப்பேட்டை,எழும்பூர்,வேலூர்,ஸ்ரீபெரும்புதூர்,நாகப்பட்டிணம் போன்ற பகுதியே அம்மக்களின் இருப்பிடமாகும். இங்கு வாழ்ந்த மக்கள் அடிப்படை உரிமைகள் கூட கிடைக்காத நிலையில் பஞ்சம், பசியின் காரணமாக அன்றாடமும் தன் வாழ்க்கையில் பசி என்னும் போராட்டத்தினை எதிர் கொண்டு வாழ்ந்தனர். மேலும் அக்காலத்தில் தாழ்ந்த வகுப்பு மக்கள் கூலி பெறாமல் அரசாங்கத்தினருக்கு அடிமை வேலைகள் செய்வதற்குக் கட்டாயப்படுத்தப்பட்டனர். பழைய மரபின் படியும், அரசாங்கச் சட்டப்படியும் பிற்பட்ட

மக்கள் இத்தகைய வேலைகளைக் கண்டிப்பாகச் செய்தே தீர வேண்டும். இத்தகைய அவலங்களை அனுபவித்து வந்த மக்கள் ஒரு நாளைக் கழிப்பதற்குக் கூட மிகவும் துன்பப்பட்டனர்.

வறுமை,பசிக்கொடுமை,பிணி முதலியவற்றாலும் துன்பப்பட்ட மக்கள் வாயில்லாத மிருகங்களுக்கு ஒப்பானவர்களாகவே வாழ்ந்தனர். ஒரு நேரச் சோற்றிற்கும், ஒரு நேரக் கூலிக்கும் அம்மக்கள் தன்னுடைய தன்மானங்களை இழந்து ஆங்கிலேயர்களின் கையை எதிர்பார்த்திருக்க வேண்டிய நிலையிருந்தது. அஞ்சி அஞ்சிச் செத்துக் கொண்டிருந்தார்கள், அந்த ஏழைகள் விலங்குகளை விட இழிவாக நடத்தப்பட்டார்கள். வயிற்றைநிரப்புவதற்குப் போதுமான உணவு அவர்களுக்கு கிடைக்காத நிலையில் ஜெயமோகன் இவர்களின் வாழ்வினைக் குறிப்பிடுகிறார்.

**குடியிருப்பின் நிலை**

கருப்பர் மக்கள் ஆரம்பக் காலத்தில் பெத்துநாயக்கன் பேட்டையிலும், முத்து நாயக்கன் பேட்டையிலும் வாழ்ந்தனர். பின்னர் புதுப்பேட்டையில் வந்து குடியேறினர். அம்மக்களின் குடியிருப்பானது சுகாதாரமற்றும், மிக நெருக்கமானதாகவும், சுத்தமின்றியும் இருந்தன.

ஏய்டன் காத்தவராயனுடன் கருப்பர் நகரம் செல்லும் போது “வெள்ளையர் நகருக்கும், கருப்புப்பட்டினத்துக்கும் நடுவே ஒரு மூங்கில் தடுப்பு வைக்கப்பட்ட இரண்டு சிப்பாய்கள் காவலிருந்தனர். குதிரையைக் கண்டதும் ஒருவன் இறங்கி ஓடி மூங்கிலை எடுத்தான், இன்னொருவன் விரைப்பாக நின்று சல்யூட் அடித்தான். சாலையின் இருபக்கமும் தென்னந்தோப்புகள் அடர்வின்றி இருக்க உள்ளே முட்புதர்கள் வளர்ந்திருந்தன, களர் மண்ணாகையால் தென்னைகள் குறுகி வளைந்து ஓலைகள் வெளிறி நின்றன. தேங்கிய நீரின் பாசிவாடை வீசியது. தோப்புகளுக்குள் ஓலை வேய்ந்த சிறிய குடிசைகள் தென்பட்டன. அவற்றில் ஒன்றிலிருந்து ஒரு செந்நிறமான நாட்டு நாய் குரைப்பும் ஊளையுமாக ஒலியெழுப்பிய படி ஓடி வந்து தூரத்தில் நின்று கொண்டு எம்பி எம்பிக் குதித்தது.”

“அந்த மண்பாதை சில அடிகள் வைப்பதற்குள் இடுங்கிய வழியாக மாறியது. தரை ஈரமானதாக குதிரைக்குளம்பு அழுந்தும்போது நொதிக்கும் வீச்சம் கொண்ட கரிய சேற்று நீர் ஊறிக்கிடந்தது. கால் புதையாமல் நடக்கும் வசதிக்காக தரை முழுக்க கோரைப்புற்களைப் போட்டிருந்தார்கள் அவை அழுகி அழுகி அழுந்திப் படிந்து ஆவியெழும் துர்நாற்றத்துடன் குதிரைக்கால்களால் கிளறப்பட்டன. குப்பையாலானவை போன்ற குடில்கள் இடைவெளியே இல்லாமல் செறிந்திருக்க அவற்றினூடாகக் கோரைப்புற்கள் வளர்ந்து நின்றன. பல குடில்கள் சற்றே பெரிய கூடை என்று தோன்றின.”[3] இவற்றில் எவ்வாறு மனிதன் கால்நீட்டி உறங்கமுடியும் எனும் கேள்விக்குறியான நிலையில் ஜெயமோகன் அம்மக்களின் இருப்பிட நிலையினைக்குறிப்பிட்டுள்ளார்.

“இருபக்கமும் தாழ்ந்த ஓலைக்கூரைகள் கொண்ட வீடுகள், மண்ணைக்குழைத்துக் கட்டி மேலே சுண்ணாம்பு பூசப்பட்டவை. படிகளுக்குக் கருங்கற்கள் போட்டிருந்தார்கள், கருகிய ஓலைக்கூரை சில சமயம் காய்ந்த புல்மண்டிய குன்றுபோல சில சமயம், கரும்பாறை போல, சில சமயம் யானைபோல, சில சமயம் குவிக்கப்பட்ட சாணிபோலத்

தோன்றிக் கொண்டே இருந்தது. இன்னொரு தெரு முழுக்க வளைந்த ஓடுகள் வேய்ந்த தாழ்ந்த கூரை கொண்ட வீடுகள், லினன் நூலால் ஆன பொய்முடிச்சுருள் போன்ற சிவந்த கூரை, வராந்தா விளிம்புக்கும் இடையே மூன்றடி கூட இடைவெளி இல்லை. வராந்தாக்கள் சாணிமெழுகப்பட்டுச் சேற்றுமேடுகள் போல இருந்தன இருண்டு குளிர்ந்து, அதன்மீது முழங்கால்வரை குட்டை வேட்டி மட்டும் அணிந்த குடுமி வைத்த பாதித்தாடி வைத்த மெலிந்த மனிதர்கள் காணப்பட்டார்கள்.""கருப்பர் மக்களைத் தவிர சாதிகளில் உயர்ந்தவர்களாகக் கருதப்பட்ட பட்லர், பரதவர்கள், பிராமணர், ரெட்டி, நாயுடு, தோடர்,செட்டி, கத்தோலிக்கர் போன்றோரின் வீடுகள் பல வித வண்ண அலங்காரங்களைக் கொண்டும், எவ்வித வறுமையுமின்றி இன்ப வாழ்வு வாழும் நிலையில் ஜெயமோகன் இவர்களைப் படைத்துள்ளார்.

**மக்களின் நிலை**

" இன்மை என ஒரு பாவி மறுமையும்
இம்மையும் இன்றி வரும்"[4] (திருக்.)

என்னும் திருவள்ளுவரின் கூற்றிற்கு ஏற்ப ஜெயமோகன் நாவலில் வரும் கருப்பர் இன மக்களை கொடும் பஞ்சம் வாட்டிய நிலையில் படைத்துள்ளார். அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்ய இயலாத நிலையில் இருப்பதே வறுமை எனப்படும். மக்களின் வாழ்வியல் சிக்கல்கள், குடும்பச் சிக்கல்கள் அனைத்திற்கும் அடிப்படை அவர்களது வறுமையே ஆகும். வேலைக்கேற்ற கூலி இல்லாமையே தொழிலாளர்களின் வாழ்வியல் சீர்கேட்டிற்குக் காரணமாகப் புதினங்களில் படைப்பாளர்கள் முன்வைக்கின்றனர். இவற்றிற்கேற்ப ஜெயமோகன் தனது நாவலில் ஆங்கிலேயரின் அடக்குமுறையே, கருப்பர் மக்களின் இழிநிலைக்குக் காரணமெனக் குறிப்பிடுகிறார்.

"கிராமங்களில் கடுமையான பஞ்சம் பரவியிருப்பதனால் கூட்டம் கூட்டமாக வந்து கொண்டே இருக்கிறார்கள். ஆரம்பத்தில் அடிநிலையில் இருந்த எங்கள் சாதிகள் வந்தார்கள். இப்போது மற்ற விவசாயச் சாதிகளும் வர ஆரம்பித்து விட்டார்கள். ஒரு கூரை என்பது இந்நகரத்தில் அத்தனை மதிப்புள்ளது. இன்னும் ஒரு மாதத்தில் கூரை என ஒன்றைக் கண்டடையாதவர்கள் சாக வேண்டியது தான்." என்னும் கொடும் பஞ்ச நிலையில் மக்களைக் குறிப்பிட்டுள்ளார்.

ஆலைக் கரும்பாய் கசக்கிப் பிழிந்தும்
அரும்பசிக் குணவு தானிய மில்லை
வேளை தோறும் கஞ்சியு மின்றி
வடிக்கும் கண்ணீர் பருகிடும் அவலம்![5] (ம.நே) என்ற வரிகளுக்கு ஏற்ப கருப்பர் மக்களின் நிலை இருந்தது. உழைப்பின் மூலம் சமூகத்தை உயர்வடையச் செய்தவர்கள் தொழிலாளர்கள். உழைத்து உழைத்துத் தன் உரிமையை மட்டுமல்லாது தனது உருத்தோற்றத்தையும் இழந்து நிற்கும் நிலைமையைத் தான் இன்றையத் தொழிலாளர்களிடம் காணமுடிகின்றது. பாத்திரங்களை விளக்கும் போது குணநலன்களையும் உருத்தோற்றத்தையும் எடுத்துக் கொள்வது தான் படைப்பாளன் உத்தி. அதிலும் தொழிலாளர் புதினங்களில் உருத்தோற்றத்திற்குச் சற்று முன்னுரிமை கொடுக்கப்பட்டுள்ளது. ஏனெனில் வறுமையின் சாயலை உருத்தோற்றத்தினால் தான் அழுத்தமாகச் சொல்ல முடியும். வறுமை, தொழிலாளர்கள் வாழ்க்கையோடு ஒன்றி விட்ட ஒன்று என்ற சிந்தனையோட்டத்திலேயே எல்லாப் புதின ஆசிரியர்களும் உருத்தோற்றத்தைச் சொல்லி தாம் எடுத்துக் கொண்ட கருவிற்கு அணி சேர்த்துள்ளனர்.

ஜெயமோகன் கருப்பர் மக்களின் உருத்தோற்றத்தைக் கூறுகையில், அவர்கள் வாழ்ந்த குடிசையின் கதவு கோரைப்புல்லைக் கொண்டு செய்யப்பட்டது. அதை மெல்லத் தள்ளித் திறந்த போது “இருண்ட குழிக்குள் பெருச்சாலிகள் தெரிவது போல, பல மனித முகங்கள் மின்னும் கண்களுடன் தெரிந்தன, அவர்களில் ஒருவன் உடலில் கோவணம் மட்டும் அணிந்து கை கூப்பிய படி வெளியே வந்தான், கிழவன் நடமாடும் எழும்புக் கூடு, நரம்புகளால் கட்டப்பட்ட எழும்புகள் புண் படிந்த சாம்பல் நிறத்தோலுக்குள் அசைந்தன, சீழ்க்கட்டிகள் போல பழுத்தக் கண்கள், அடுத்த குடிசைக்குள் அதே போல இன்னும் நிறைய பேர் இருந்தார்கள், காலிடுக்குகளில் குழந்தைகளின் முகங்கள் தெரிந்தன.”“இந்த எல்லாக் குடில்களுக்குள்ளும் நெருக்கியடித்துக் கொண்டு மனிதர்கள் நிறைந்திருக்கிறார்கள். இன்னும் இருட்ட வில்லை, இருட்டும் வரை வேலை செய்து விட்டு ஆட்கள் வர ஆரம்பித்தால் இங்கே நடமாடவே முடியாது.”

இவ்வாறு நெருக்கமான சூழ்நிலையில் வாழும்நிலையில் மக்களைப் படைத்துள்ளார். அனைத்துக் குடிசைகளுக்குள்ளும் “அந்தக் குடிசைகள் பெரும் வலியுடன் அவர்களைப் பிதுக்கிப் பிரசவித்து வெளியேத் தள்ளுவது போலிருந்தது, பேயுருவங்கள் போன்ற மனிதர்கள், கல்லறை திறந்து கிளம்பி வருபவர்கள் போல பாதி மட்கிய உடல்கள்”. இவ்வாறு சதுப்பு நிலங்களில் வயிற்றுப் பிழைப்புக்காக இடம் பெயர்ந்து வாழும் இம்மக்களின் நிலையினை குறிப்பிடுகிறார். கோடையில் இது நீராவிப் பானை போலத் தான் இருக்கும், ஆனால் கோடைகாலத்தில் தான் கொஞ்சமாவது வாழ முடியும், மழைக்காலத்தில் இடுப்பளவுச் சேற்று நீரில் நடந்து தான் இங்கே வர முடியும். குடிசைக்குள் இரவெல்லாம் ஈரத்தில் குந்தி அமர்ந்துதான் உறங்க முடியும், ஒரு மழைக்காலம் முடிந்ததும் இங்கே மக்கள் தொகை மூன்றில் ஒரு பங்கு குறைந்து விடும். அந்த இடங்களுக்குப் புதிய மனிதர்கள் அடுத்த கோடையில் வந்து சேர்வார்கள் என்று

“நெருநல் உளன் ஒருவன் இன்று இல்லை என்னும்
பெருமை உடைத்து இவ்வுலகு”[6]

என்னும் திருவள்ளுவரின் வார்த்தைக்கு ஏற்ப ஜெயமோகன் மக்களின் நிலையற்ற தன்மையினைக் குறிப்பிடுகிறார். பாலை வனத்தில் வாழும் கொடும் விலங்குகளைப் போல கருப்பர் மக்களின் நிலையினைக் கண்டு கலங்கிய நிலையில் அவர்களின் கட்டற்ற தன்மையினை,“விசத்திரம்! மிக விசித்திரம் இப்படிப்பட்ட நிலையில் மனிதர்கள் வாழ முடியுமென்பதே ஆச்சிரியம், காட்டு விலங்குகள் கூட இன்னும் சுத்தமான இடங்களில் வாழ்கின்றன.” என்று விலங்குகளை விட மோசமான நிலையில் மக்களின் வாழ்வினைக் கூறுகிறார்.

**முடிவுரை**

இலக்கியத்தின் பல்வேறு வகைகளுள் ஒன்றான நாவல் மறுமலர்ச்சி யுகத்தில் தோன்றிய ஒரு கலை வடிவமாகும். உலக மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் நாவல் இலக்கியங்கள் படைக்கப்படுகின்றன. அவ்வகையில் முந்நூறு ஆண்டுகளுக்கு முன் மதராஸ் மாகானத்தில் வாழ்ந்த கருப்பர் மக்கள் என்றழைக்கப்படும் விளிம்பு நிலை மக்களின் வாழ்வில் அனுபவித்த பெரும் அவலங்களையம், போராட்ட நிலையினையும், மக்களுக்கு உணர்த்த வேண்டும் என்னும் நோக்கில் ஜெயமோகன் இந்நாவலை வரலாற்றின் தன்னிலையாகப் படைத்திருக்கிறார். மேலும் உலகில் எவரும் அனுபவித்திராத கொடும் பஞ்சங்களில் ஒன்றாக

மெட்ராஸ் பஞ்சத்தினைச் சுட்டியுள்ளார். மற்றும் அங்கு வாழ்ந்த மக்களின் வாழ்வின் நிலைகளைப் பற்றியும் இக்கட்டுரையின் வாயிலாக அறியமுடிகிறது.

**அடிக்குறிப்புகள்**

[1] மு.செல்வம், தமிழ்நாவல்களில் மனித உரிமைகள் மீறல்,ப,55,.

[2] மேலது,ப,57,.

[3] ஜெயமோகன்,வெள்ளையானை,ப,112,.

[4] பி.எஸ்.ஆச்சார்யா(உ.ஆ), திருக்குறள், ப, 587,.

[5] மனிதநேயம்,ஆகஸ்ட் 2014, ப,25,.

[6] பி.எஸ்.ஆச்சார்யா(உ.ஆ), திருக்குறள், ப,233,.